## மெடிஷீல்டு லை‌ஃப் 2020 மறுஆய்வு

(பொது கலந்தாலோசனைக்கானது)

1. மெடிஷீல்டு லை‌ஃப் என்பது சிங்கப்பூரர்கள் அனைவருக்கும், ஏற்கனவே இருக்கக்கூடிய உடல்நலப் பிரச்சனைகளைப் பொருட்படுத்தாமல், பெருமளவிலான மருத்துவக் கட்டணங்களிலிருந்து வலுவான பாதுகாப்பளிப்பதற்காக 2015 நவம்பர் மாதம் தொடங்கப்பட்ட அடிப்படை சுகாதாரக் காப்புறுதித் திட்டமாகும். இத்திட்டம் காலத்திற்கேற்ப பொருத்தமாக இருப்பதை உறுதிப்படுத்த, திட்டத்தின் அனுகூலங்களையும் சந்தாக்களையும் மறுஆய்வு செய்து புதுப்பிப்பதற்கு இதுவே உரிய காலம். மெடிஷீல்டு லை‌ஃப் மன்றம், முன்னோட்டப் பரிந்துரைகள் பற்றிய கருத்துகளையும், திட்டத்தை மேம்படுத்தக்கூடிய யோசனைகளையும் திரட்ட விரும்புகிறது. இவற்றை 2021 முற்பகுதியில் அமலாக்கத் திட்டமிடப்படுகிறது.

### பகுதி I: பின்னணி

### சிங்கப்பூரின் சுகாதாரப் பராமரிப்பு நிதியளிப்பு முறையின் மேலோட்டமான விவரம்

2. சுகாதாரப் பராமரிப்பு சிங்கப்பூரர்களுக்குக் கட்டுப்படியாவதை உறுதிப்படுத்தும் “S+3Ms”[1] எனும் பொது சுகாதாரப் பராமரிப்பு நிதியளிப்பு சட்டமைப்பின் ஒரு பகுதியாக மெடிஷீல்டு லை‌ஃப் இடம்பெறுகிறது (கீழ்க்காணும் படம் 1-ஐ பார்க்கவும்). மொத்தத்தில், பணம் செலுத்த இயலாத காரணத்தால் எந்தவொரு சிங்கப்பூரருக்கும் தேவையான சுகாதாரப் பராமரிப்பு மறுக்கப்படாதிருப்பதை S+3Ms உறுதி செய்கிறது.

படம் 1: S+3Ms சட்டமைப்பு




### இழப்பின் அபாயத்தைப் பகிரும் முறையை மெடிஷீல்டு லை‌ஃப் வலுவாக்கியுள்ளது

3. சிங்கப்பூரர்களுக்கு அல்லது அவர்களது குடும்பத்தினருக்கு நிதிநிலை உளைச்சல் உண்டாக்கக்கூடிய பெருமளவிலான மருத்துவமனை கட்டணங்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்க, சுகாதாரக் காப்புறுதி முக்கிய பங்காற்றுகிறது. சமவயதுப் பிரிவைச் சேர்ந்த தனிநபர்களின் நிதி வளங்களை ஒன்றுதிரட்டுவதன்வழி, தனிநபர்கள் பெருமளவிலான கட்டணங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள சிறிய சந்தாவே செலுத்துகிறார்கள்.

[1] S+3Ms என்பது நிதி உதவிகள், மெடிஷீல்டு லை‌ஃப், மெடிசேவ், மெடி‌ஃபண்டு ஆகியவற்றைக் குறிக்கிறது.

4. காப்புறுதியின் பங்கை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், முன்னதாக நடப்பிலிருந்த மெடிஷீல்டு திட்டத்திற்குப் பதிலாக, மூன்று முக்கிய மேம்பாடுகளுடன் மெடிஷீல்டு லைஃப் திட்டம் 1 நவம்பர் 2015 அன்று தொடங்கப்பட்டது:

(i) **மேம்பட்ட பாதுகாப்பு:** மெடிஷீல்டு லைஃப் கூடுதல் அனுகூலங்களுடன் பெருமளவிலான மருத்துவமனை கட்டணங்களுக்கும் விலையான நாட்பட்ட நோய் சிகிச்சைகளுக்கும் மேம்பட்ட பாதுகாப்பை அளித்தது.

கடந்த நான்கு ஆண்டுகளில், 2.3 மில்லியன் கோரிக்கைகளுக்குச் சுமார் $3.5 பில்லியன் தொகையை மெடிஷீல்டு லைஃப் வழங்கியது. பெருமளவிலான கட்டணங்களுக்குக் கூடுதலான தொகைகள் கிடைத்தன. 2019-ல், நிதி உதவிபெற்ற ஆக அதிகமான 10% மருத்துவமனை கட்டணங்களுக்கு (அல்லது $4,000-க்கு மேலான கட்டணங்கள்), ஒவ்வொரு கோரிக்கைக்கும் சராசரியாக $6,000 வழங்கப்பட்டது.

இதன் காரணமாக, பத்தில் எட்டு சிங்கப்பூரர்கள் பொது மருத்துவமனைகளின் நிதி உதவிபெற்ற கட்டணங்களுக்கு மிகக்குறைவான தொகையே செலுத்தினார்கள் அல்லது அறவே ரொக்கம் செலுத்தவில்லை.

(ii) **வாழ்நாள் முழுதும், அனைவருக்கும் பாதுகாப்பு:** சிங்கப்பூரர்கள் அனைவரும், அவர்களின் உடல்நிலை எப்படி இருந்தாலும், வாழ்நாள் முழுதும் மெடிஷீல்டு லைஃப் திட்டத்தால் இப்போது பாதுகாக்கப்படுகிறார்கள். இதற்குமுன் காப்புறுதி பெறாதிருந்தவர்களும் இதில் உள்ளடங்குவர். கடந்த நான்கு ஆண்டுகளில், இதற்குமுன் காப்புறுதி பெறாதவர்களின் 347,000 கோரிக்கைகளுக்கு $538 மில்லியன் (அல்லது 15%) மெடிஷீல்டு லைஃப் தொகை வழங்கப்பட்டது. காப்புறுதி பெற்றிருந்தும், ஏற்கனவே இருந்த உடல்நலப் பிரச்சனைகள் விலக்கப்பட்டிருந்தவர்களுக்கு, அந்த விலக்குகள் நீக்கப்பட்டன.

(iii) **கட்டுப்படியாகும் சந்தாக்கள்:** அரசாங்கம் அனைவருக்கும் சந்தாக்கள் கட்டுப்படியாவதை உறுதிப்படுத்த ஆதரவு வழங்கியது. கடந்த நான்கு ஆண்டுகளில், அரசாங்கம் $3.1 பில்லியன் சந்தா நிதி உதவிகளும் இதர ஆதரவும் வழங்கியது. இதில் $31 மில்லியன் தொகை, நிதி உதவிகள், மெடிசேவ், குடும்ப ஆதரவு ஆகியவற்றுக்குப் பிறகும் சந்தா செலுத்த இயலாத வசதி குறைவானோருக்குக் கூடுதல் சந்தா ஆதாரவாக வழங்கப்பட்டது.

5. மெடிஷீல்டு லைஃப் பற்றிய மேல்விவரங்கள் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் கிடைக்கும்.

### மெடிலீல்டு லைஃப் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

6. போதுமான பாதுகாப்பை நிலைநாட்டும் அதே வேளையில் சந்தாக்களைக் கட்டுப்படியாகும் அளவில் வைத்திருக்க, மெடிஷீல்டு லைஃப் திட்டத்தில் கோரிக்கை வரம்புகள், கழிப்புத்தொகை, இணைக்காப்புறுதி போன்ற அம்சங்கள் உள்ளன. (படம் 2-ஐ பார்க்கவும்.) மேல்விவரம் அறிய தகவல் கையேட்டை இங்கே பார்க்கலாம்.

படம் 2: மெடிஷீல்டு லைஃப் கோரிக்கைகள் கணக்கிடப்படும் முறை

**கோரிக்கை வரம்புக்கு மேலான கட்டணம்** *

**மெடிஷீல்டு லைஃப் காப்பீட்டுத் தொகை**

கோரப்படும் தொகையில் கழிப்புத்தொகையும் இணைக் காப்புறுதியும் கழித்த பிறகு, மீதித் தொகையை மெடிஷீல்டு லைஃப் செலுத்தும்.

காப்பீட்டுத் தொகைக்கு ஒவ்வொரு கொள்கை ஆண்டிலும் $100,000 வரம்பு உண்டு, வாழ்நாள் முழுவதற்கும் கோரிக்கை வரம்பு கிடையாது.

**இணைக் காப்புறுதி** *

கோரப்படும் தொகையில் கழிப்புத்தொகையைக் கழித்த பிறகு நோயாளி செலுத்த வேண்டிய பங்கு (3% முதல் 10%).

**அதிகபட்ச கோரிக்கை வரம்பு**

கோரிக்கை வரம்பு சிகிச்சையின் வகைகையும் மருத்துவமனையில் தங்கியிருக்கும் நாட்களையும் பொறுத்து நிர்ணயிக்கப்படும்.

**கழிப்புத்தொகை** *

மெடிஷீல்டு லைஃப் காப்புத்தொகை வழங்கீடு தொடங்குவதற்கு முன்பாக ஒவ்வொரு கொள்கை ஆண்டுக்கும் நோயாளி செலுத்தும் தொகை இது. வயதையும் படுக்கைப்பிரிவையும் பொறுத்து $1,500 முதல் $3,000 வரை கழிப்புத்தொகை செலுத்தவேண்டும்.

** கழிப்புத்தொகை, இணைக்காப்புறுதி, கோரிக்கை வரம்புக்கு மேலான கட்டணம் ஆகியன மெடிசேவ் மற்றும்/அல்லது ரொக்கம் பயன்படுத்த செலுத்தப்படவேண்டும்.*

கட்டணத் தொகை கோரிக்கை வரம்புக்கு மேலாக இருந்தால், **மெடிஷீல்டு லைஃப் தொகை வழங்கப்படாது என்று அர்த்தமில்லை.** கழிப்புத்தொகையும் இணைக்காப்புறுதியும் கழித்தபின், கோரிக்கை வரம்பு வரை மெடிஷீல்டு லைஃப் செலுத்தும்.

**பகுதி II: அனுகூலங்களை மேம்படுத்துவதற்கான முன்னோட்டப் பரிந்துரைகள்**

**முக்கிய கோட்பாடுகளின் அவசியம் நீடிக்கிறது**

7. மெடிஷீல்டு லைஃப் 2020 மறுஆய்வு, இத்திட்டம் 2015-ல் தொடங்கப்பட்டதிலிருந்து மேற்கொள்ளப்படும் முதல் முக்கிய மறுஆய்வாகும். அரசாங்கத்தின் கடப்பாட்டின்படி, முதல் ஐந்து ஆண்டுகளுக்கு சந்தாக்கள் தொடர்ந்து நிலையாகக் கட்டிக்காக்கப்பட்டன. விரிவான பொது கலந்தாலோசனைக்குப் பிறகு மெடிஷீல்டு லைஃப் மறுஆய்வுக் குழு பரிந்துரைத்த மெடிஷீல்டு லைஃப் திட்டத்தின் முக்கிய வடிவமைப்புக் கோட்பாடுகள் இன்றுவரை அவசியமானவையாக நீடிக்கின்றன.[2] குறிப்பாக, இத்திட்டத்தை நீண்டகாலத்திற்கு நிலைநாட்டும் வகையில், சிங்கப்பூரர்களுக்குக் கூடுதல் அனுகூலங்கள் வழங்குவதற்கும் சந்தாக்களைக் கட்டுப்படியாகும் அளவில் வைத்திருப்பதற்கும் இடையில் சமநிலை காணப்படவேண்டும்.

**2020 மறுஆய்வுக்காக மெடிஷீல்டு லைஃப் அனுகூலங்கள் மேம்பாடு**

8. இருந்தாலும், உருமாறிவரும் மருத்துவ நடைமுறை, சுகாதாரப் பராமரிப்புச் செலவின் பணவீக்கம், கிடைக்கப்பெற்ற கோரிக்கைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப, மெடிஷீல்டு லைஃப் அனுகூலங்களும் சந்தாக்களும் அடிக்கடி மறுஆய்வு செய்யப்பட்டாக வேண்டும். தொடர்ந்து உறுதிப்பாடு அளிப்பதற்கும் நீடித்து நிலைப்பதற்கும் இது அவசியம்.

9. இந்த அடிப்படையில், மெடிஷீல்டு லைஃப் திட்டத்தில் மேம்படுத்தக்கூடிய இரு அம்சங்களை மன்றம் அடையாளம் கண்டுள்ளது:

---

[2] மெடிஷீல்டு லைஃப் மறுஆய்வுக் குழுவின் அறிக்கையை இங்கே காணலாம்.

(a) <u>மேம்பட்ட பாதுகாப்பளிக்க, கோரிக்கை வரம்புகள் புதுப்பிப்பு மற்றும் சீரமைப்பு.</u> மெடிஷீல்டு லைஃப் திட்டத்தின் கோரிக்கை வரம்புகள், பணவீக்கத்திற்கும் மருத்துவத்துறையின் முன்னேற்றத்திற்கும் ஏற்ப போதிய பாதுகாப்பளிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் புதுப்பிக்கப்படவேண்டும். சிகிச்சை வகையை அதிகமாகச் சார்ந்த கோரிக்கை வரம்புகள் மேம்பட்ட பாதுகாப்பளிக்க முடியும், குறிப்பாகப் பராமரிப்பின் அல்லது சிகிச்சையின் வகையைப் பொறுத்து செலவுகள் பெருமளவு மாறுபடும் துறைகளில். இந்த மறுஆய்வின் ஒரு பகுதியாக, இவ்வாண்டு ஜனவரி மாதம் மெடிஷீல்டு லைஃப் திட்டத்தில் மேலும் நுணுக்கமான அறுவை சிகிச்சை கோரிக்கை வரம்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பொதுவாகவே அதிக விலையாக இருக்கக்கூடிய அதிக சிக்கலான அறுவை சிகிச்சைகளுக்கு மேம்பட்ட பாதுகாப்பளிப்பது இதன் நோக்கம். இந்த மறுஆய்வில், கோரிக்கை வரம்புகளில் கூடுதலான சீரமைப்புகளைப் பரிந்துரைக்கிறோம்.

(b) <u>பெரிய அளவிலான சுகாதாரப் பராமரிப்பு உருமாற்ற முனைப்புகளுக்கு ஆதரவு.</u> நமது தேசிய காப்புறுதித் திட்டம் என்ற முறையில், மெடிஷீல்டு லைஃப் திட்டம் சுகாதார அமைச்சின் பெரிய அளவிலான சுகாதாரப் பராமரிப்பு உருமாற்ற முனைப்புகளுக்கு ஆதரவளிக்கவேண்டும். கடந்த ஈராண்டுகளில், சிங்கப்பூரர்கள் சமூகத்திலும் வீட்டிலும் மேலும் பொருத்தமான பராமரிப்பு பெறும் வகையில் திட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு A பார்க்கவும்.) இதன்வழி, விலையான மருத்துவமனை பராமரிப்புக்கான தேவை குறைக்கப்பட்டு, சிங்கப்பூரர்கள் அனைவருக்கும் சுகாதாரப் பராமரிப்புச் செலவுகள் தாக்குப்பிடிக்கக்கூடிய அளவில் வைத்திருக்கப்படுகின்றன. இந்த மறுஆய்வில், சுகாதாரப் பராமரிப்பின் உருமாற்றத்திற்கு ஆதரவளிக்கும் கூடுதல் மேம்பாடுகளைப் பரிந்துரைக்கிறோம். நோயாளிகளை முன்கூட்டியே மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு ஆதரவளிப்பதும் இதில் உள்ளடங்கும்.

10. மன்றத்தின் முன்னோட்டப் பரிந்துரைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. பரிந்துரைக்கப்படும் மாற்றங்களின் சுருக்கம் <u>பின்னிணைப்பு B-ல்</u> பட்டியலிடப்பட்டுள்ளன.

*(a) <u>**கோரிக்கை வரம்புகளின் புதுப்பிப்பு மற்றும் சீரமைப்பு**</u>*

11. **நிதி உதவிபெறும் கட்டணங்களில் பத்தில் ஒன்பதின் கோரிக்கை வரம்புகளைப் புதுப்பிக்கவேண்டும்.** அதோடு, கோரிக்கை வரம்புகள் இன்னும் அடிக்கடி மறுஆய்வு செய்யப்படவேண்டும். இதன் தொடர்பில், இனிவரும் காலத்தில் கோரிக்கை வரம்புகள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுஆய்வு செய்யப்படுமென சுகாதார அமைச்சு அறிவித்திருப்பதை மன்றம் கவனத்தில் கொள்கிறது.

12. **சமூக மருத்துவமனை பராமரிப்புக்கும் வெளிநோயாளி கதிரியக்க சிகிச்சைக்கும் சிகிச்சை சார்ந்த கோரிக்கை வரம்புகளை அறிமுகப்படுத்தவேண்டும்.** தற்போது, நோயாளி மறுவாழ்வு பராமரிப்பு பெறுகிறாரா அல்லது துணைத் தீவிரப் பராமரிப்பு[3] பெறுகிறாரா என்பதைப் பொருட்படுத்தாமல், சமூக மருத்துவமனையில் தங்குவோருக்கு அதே கோரிக்கை வரம்பு நடப்பிலிருக்கிறது. மறுவாழ்வு பராமரிப்பைவிட துணைத் தீவிரப் பராமரிப்பு அதிக விலையானது என்பதால், மறுவாழ்வு பராமரிப்பு பெறும் நோயாளிகளுடன் ஒப்பிடுகையில், துணைத் தீவிரப் பராமரிப்பு பெறும் நோயாளிகளுக்கு மெடிஷீல்டு லைஃப் போதுமான காப்பளிக்கவில்லை. துணைத் தீவிரப் பராமரிப்புக்கும் மறுவாழ்வு பராமரிப்புக்கும் தனித்தனி கோரிக்கை வரம்புகளை அறிமுகப்படுத்துவதன்வழி, இரு வகையான நோயாளிகளும் மெடிஷீல்டு லைஃப் திட்டத்தின்கீழ் நிகரான அளவிலான காப்பீட்டைப் பெறுவார்கள். சிகிச்சை சார்ந்த கோரிக்கை வரம்புகளின் அறிமுகத்தால் பயனடையக்கூடிய மற்றொன்று வெளிநோயாளி கதிரியக்க சிகிச்சை. இதன்வழி அதிக விலையான வெளிநோயாளி கதிரியக்க சிகிச்சைக்கு மேம்பட்ட காப்பீடு கிடைக்கும்.

---

[3] மறுவாழ்வு பராமரிப்பு என்பது ஒருவரின் நோய்க்குப் பிறகு நேரும் இயலாமை மற்றும் இயக்காற்றல் குறைபாட்டை சீர்ப்படுத்தும் பயிற்சி சிகிச்சையைக் குறிக்கிறது. துணை தீவிரப் பராமரிப்பு என்பது தீவிர கவனிப்பளிக்கும் மருத்துவமனைகளில் வழங்கப்படுவதைவிடக் குறைவான தீவிரம் கொண்ட மருத்துவ, தாதிமை பராமரிப்பு கூடுதலாகத் தேவைப்படும் சிக்கலான மருத்துவப் பிரச்சனைகளுக்கானது.

13. **கொள்கை ஆண்டுக்கான கோரிக்கை வரம்பு** $100,000-**ல் இருந்து** $150,000 **ஆக உயர்த்தப்படவேண்டும்.** இதன்வழி, ஓர் ஆண்டில் நீண்டநாள் அல்லது பலமுறை மருத்துவமனையில் தங்குவதால் நேரும் மிகப்பெரிய கட்டணத்தொகைகளிலிருந்து சிங்கப்பூரர்களுக்குக் கூடுதல் காப்பீடு கிடைக்கும்.

*(b)* <u>பெரிய அளவிலான சுகாதாரப் பராமரிப்பு உருமாற்ற முனைப்புகளுக்கு ஆதரவளிப்பு</u>

14. **மருத்துமனையில் தங்கியிருக்கும் முதல் இரண்டு நாட்களுக்கான அன்றாட படுக்கைப்பிரிவு, சிகிச்சை கட்டணங்களுக்கு உயர் கோரிக்கை வரம்புகள்.** மருத்துவமனைகளில் தங்கும் நோயாளிகளின் படுக்கைப்பிரிவு, சிகிச்சை கட்டணங்களுக்கு, வழக்கமான படுக்கைப்பிரிவாக இருந்தால் ஒரு நாளுக்கு $700 கோரிக்கை வரம்பும், தீவிர சிகிச்சைப் பிரிவாக இருந்தால் ஒரு நாளுக்கு $1,200 கோரிக்கை வரம்பும் நடப்பில் உள்ளன. ஆயினும், மருத்துவமனையில் தங்கியிருக்கும் முதல் சில நாட்களின்போது நோயாளிகளின் கட்டணங்கள் கூடுதலாக இருக்கக்கூடும். நோயாளியின் உடல்நலப் பிரச்சனைகளைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்படும் விலையான பரிசோதனைகள் இதற்குக் காரணம். இதனால், முன்கூட்டியே வீடு திரும்பும் நோயாளிகளுக்கு, கூடுதல் காலம் தங்கியிருக்கும் நோயாளிகளின் அளவுக்குப் போதிய காப்பீடு கிடைப்பதில்லை. கூடுதல் காலம் மருத்துவமனையில் தங்கியிருப்போரின் மொத்த கோரிக்கை வரம்பு முதல் சில நாட்களின் உயர் கட்டணத்தை ஈடு செய்வதற்குப் பொதுவாகப் போதுமானதாக இருப்பது இதற்குக் காரணம்.[4] எனவே, குறுகியகாலம் மருத்துவமனையில் தங்கியிருப்போருக்கு மேம்பட்ட காப்பீடு வழங்க, மருத்துவமனையில் தங்கியிருக்கும் முதல் இரண்டு நாட்களுக்கு உயர் கோரிக்கை வரம்புகளை அறிமுகப்படுத்த நாங்கள் பரிந்துரைக்கிறோம். சுகாதாரப் பராமரிப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களால் முன்கூட்டியே வீடு திரும்பக்கூடிய சில நோயாளிகளுக்கு இது பயனளிக்கும். கூடுதல் காலம் தங்கியிருக்கும் நோயாளிகளும் உயர் கோரிக்கை வரம்புகளால் பயனடைவார்கள்.

15. **வயது மூத்த நோயாளிகளின் பகல்நேர அறுவை சிகிச்சைகளுக்கான கழிப்புத்தொகை குறைக்கப்படவேண்டும்**. பகல்நேர அறுவை சிகிச்சைக்குச் செல்லும் 80 வயதுக்கு மேலான நோயாளிகளின் கழிப்புத்தொகையை "சி" படுக்கைப்பிரிவுகளில் தங்கியிருப்போரின் கழிப்புத்தொகைக்கு இணையாக $3,000-ல் இருந்து $2,000 ஆகக் குறைக்கலாம். கழிப்புத்தொகை ஒரே அளவில் இருக்கும்போது, மருத்துவமனையில் தங்கியிருப்பதற்குப் பதிலாக பகல்நேர அறுவை சிகிச்சையைத் தேர்ந்தெடுக்க நோயாளிகள் தயங்காதிருப்பதை உறுதிப்படுத்தலாம். 80 வயதும் அதற்குக் குறைவான வயதுமுள்ள பகல்நேர அறுவை சிகிச்சை நோயாளிகளின் கழிப்புத்தொகை ஏற்கனவே "சி" படுக்கைப்பிரிவில் தங்கியிருக்கும் நோயாளிகளுக்கான கழிப்புத்தொகைக்கு இணையாக இருக்கிறது.

*(c)* <u>மற்ற பரிந்துரைகள்</u>

16. **தனியார் மருத்துவமனைகளுக்கான விகிதப்படியான காரணியை** 25 **விழுக்காட்டுக்குக் குறைக்கவேண்டும்.** நோயாளிகள் நிதி உதவிபெறும் பராமரிப்பை அல்லது நிதி உதவிபெறாத பராமரிப்பைத் தேர்ந்தெடுத்தாலும், ஒரே மாதிரியான மெடிஷீல்டு லைஃப் காப்பீட்டுத் தொகைகளைப் பெறுவதை உறுதிப்படுத்துவது விகிதப்படியான காரணியின் நோக்கம். தனியார் மருத்துவமனை கட்டணங்கள் தற்போது 35 விழுக்காடு விகிதப்படி கணக்கிடப்படுகின்றன. மெடிஷீல்டு லைஃப் காப்பீட்டுத் தொகையைக் கணக்கிடுவதற்கு முன்பாக, தனியார் மருத்துவமனை கட்டணங்களை நிதி உதவிபெறும் கட்டணத்திற்கு அதிக நிகராக்குவது இதன் நோக்கம். எடுத்துக்காட்டாக, தனியார் மருத்துவமனையின் $10,000 கட்டணம், மெடிஷீல்டு லைஃப் காப்பீட்டுத் தொகையைக் கணக்கிடுவதற்கு முன்பாக $3,500 ஆக விகிதப்படி கணக்கிடப்படுகிறது. இந்த விகிதப்படியான காரணி இல்லாவிட்டால், தனியார் மருத்துவமனை கட்டணங்களுக்கு மெடிஷீல்டு லைஃப் கூடுதல் காப்பீட்டுத்தொகை வழங்க வேண்டியிருக்கும். ஏனெனில், தனியார் மருத்துவமனை கட்டணங்கள் நிதி உதவிபெறும் கட்டணங்களைவிட அதிகமாக இருக்கும். அண்மை கட்டணங்களின் அடிப்படையில், 35 விழுக்காடு விகிதப்படியான

---

[4] கோரக்கூடிய மொத்த தொகை மருத்துவமனையில் தங்கியிருக்கும் நாட்களின் அடிப்படையிலானது. பயன்படுத்தப்படாத வரம்புகளை வேறொரு நாளின் கட்டணத்திற்குப் பயன்படுத்தலாம். எ.கா. வழக்கமான படுக்கைப்பிரிவில் 3 நாட்கள் தங்கும்போது, மொத்த கோரிக்கை வரம்பு 3 x $700 = $2,100. முதல் 2 நாட்களின் கட்டணங்கள் நாளுக்கு $800 ஆகவும், மூன்றாம் நாளின் கட்டணம் $500 ஆகவும் இருந்தால், கோரக்கூடிய மொத்த தொகை $2,100 கோரிக்கை வரம்புக்குள் இருக்கும். ஏனெனில், மூன்றாம் நாளின் பயன்படுத்தப்படாத வரம்புகளை முந்திய நாட்களின் கட்டணங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

காரணி, தனியார் மருத்துவமனை கட்டணங்களை நிதி உதவிபெறும் ஒப்பிடத்தக்கக் கட்டணங்களுக்கு நிகராகக் குறைப்பதற்குப் போதுமானதாக இல்லை. எனவே, இந்த விகிதத்தை 25 விழுக்காட்டுக்குக் குறைப்பதன்வழி, உண்மையான கட்டண வேறுபாடுகளை மேலும் தெளிவாகப் பிரதிபலிப்பதோடு, தனியார் மருத்துவமனையின் நோயாளிகளும் நிதி உதவிபெறும் நோயாளிகளும் ஒரே மாதிரியான காப்பீட்டுத்தொகைகள் பெறுவதையும் உறுதிப்படுத்த முடியும்.

17. **பின்வருபவற்றுக்கான வழக்கமான விலக்கல்கள் நீக்கப்படவேண்டும்:**

i. **தற்கொலை முயற்சியால் அல்லது வேண்டுமென்றே சுயமாகக் காயப்படுத்திக் கொண்டதால் தேவைப்படும் சிகிச்சைகள்.** சுயமாகக் காயப்படுத்திக் கொள்வோருக்கு முறையான சிகிச்சை அளிப்பதே தகுந்த அணுகுமுறை என்பதற்கான அங்கீகாரம் அதிகரித்து வருகிறது. தேசிய சுகாதாரக் காப்புறுதியான மெடிஷீல்டு லைஃப், தனிநபர்கள் தேறி வருவதற்கு ஆதரவளிக்கலாம்.

ii. **போதைப்புழக்கத்தால், மதுப்பழக்கத்தால் அல்லது போதைப்பொருள் அல்லது மது உட்கொண்டதால் தேவைப்படும் சிகிச்சைகள்.** அமெரிக்க அடிமைப்பழக்க மருத்துவச் சங்கத்தின்படி, அடிமைப்பழக்கம் என்பது மூளையின் மின்னோட்டங்கள், மரபணுவியல், சுற்றுப்புறம், தனிநபரின் வாழ்க்கை அனுபவங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான சிக்கலான செயல்பாடுகள் சம்பந்தப்பட்டது. அடிமைப்பழக்கத்திற்கான தடுப்பு முயற்சிகளும் சிகிச்சைகளும் மற்ற நாட்பட்ட நோய்களுக்கானவற்றைப் போலவே பொதுவாக வெற்றிகரமாக உள்ளன. தேசிய சுகாதாராக் காப்புறுதி என்ற முறையில் மெடிஷீல்டு லைஃப் தனிநபர்கள் அடிமைப்பழக்கங்களிலிருந்து மீண்டுவரவும் குணமடையவும் ஆதரவளிக்கலாம்.

## <u>பகுதி III: சந்தாக்களும் சந்தாவின் கட்டுப்படியாகும் தன்மையும் மறுஆய்வு</u>

### சந்தா மாற்றங்கள்

18. மேம்பட்ட காப்பீட்டுக்கும், உயர் காப்பீட்டுத்தொகைக்கும், சுகாதாரப் பராமரிப்புச் செலவின் பணவீக்கத்திற்கும், உண்மையான கோரிக்கை நிலவரத்திற்கும்[5] ஏற்ப மெடிஷீல்டு லைஃப் சந்தாக்களில் இடையிடையில் மாற்றம் செய்யப்படவேண்டும். குறிப்பாக, கடந்த நான்கு ஆண்டுகளில் மெடிஷீல்டு லைஃப் காப்பீட்டுத்தொகைகள் கிட்டத்தட்ட 40% அதிகரித்துள்ளன. காப்பீடு கோருவோரின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 30% அதிகரித்துள்ளது.

19. இத்திட்டம் தொடர்ந்து நீடித்து நிலைப்பதை உறுதிப்படுத்த, காப்பீட்டுக் கணிப்பாளரின் பரிந்துரைப்படி இந்தச் சுற்றில் சந்தாக்களில் மாற்றம் செய்ய மெடிஷீல்டு லைஃப் மன்றம் பரிந்துரைக்கிறது. இந்தச் சுற்றின் சந்தா மாற்றங்களில், முன்னதாக 2018 முதல் 2020 வரை அமலாக்கப்பட்ட அனுகூல மேம்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படும். (<u>பின்னிணைப்பு A</u> பார்க்கவும்.)

> சந்தா கட்டுப்படியாவதை உறுதிப்படுத்த, குறைந்த முதல் நடுத்தர வருமானம் ஈட்டுவோருக்கு 50% வரை சந்தா நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. மெர்டேக்கா தலைமுறை மூத்தோர்கள் கூடுதலாக 5% அல்லது 10% சந்தா நிதி உதவிகளும், 2019 முதல் 2023 வரை ஒவ்வோர் ஆண்டும் $200 மெடிசேவ் நிரப்புத்தொகையும் பெறுகிறார்கள். முன்னோடித் தலைமுறை மூத்தோர்கள், பிறந்த ஆண்டுப் பிரிவின் அடிப்படையில், சந்தாவுக்கு 40% முதல் 60% வரை சிறப்பு நிதி உதவியும், ஒவ்வோர் ஆண்டும் $200 முதல் $800 வரையிலான மெடிசேவ் நிரப்புத்தொகையும் பெறுகிறார்கள். சந்தா நிதி உதவிகள் பற்றிய மேல்விவரங்களுக்கு, தகவல் கையேட்டை <u>இங்கே</u> பார்க்கலாம்.

[5] மெடிஷீல்டு லைஃப் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மொத்த காப்பீட்டுத்தொகை, திட்டம் அறிமுகமானதிலிருந்து ஆண்டுக்குச் சுமார் 12% அதிகரித்து, 2016-ன் $758 மில்லியனிலிருந்து 2019-ல் $1.04 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. இது சிங்கப்பூரின் தேசிய சுகாதாரச் செலவினத்தில் 2012 முதல் 2017 ஏற்பட்ட வருடாந்தர அதிகரிப்புக்குக் கிட்டத்தட்ட நிகரானது.

20. கொவிட்-19 நிலவரத்தால் சிங்கப்பூரர்களும் பொருளியலும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், சந்தாக்களைச் செலுத்த சிங்கப்பூரர்கள் சிலர் அதிக சவால்களை எதிர்நோக்கக்கூடும் என்பதை மன்றம் உணர்கிறது. எனவே, இந்த அசாதாரணமான காலகட்டத்தில் கூடுதல் உதவி வழங்குவது குறித்து பரிசீலிக்குமாறு சுகாதார அமைச்சிடம் மன்றம் கேட்டுக்கொண்டது. சுகாதார அமைச்சு அடுத்த ஈராண்டுகளுக்கு சிங்கப்பூரர்களுக்குக் கூடுதல் ஆதரவளிக்க உறுதி அளித்திருப்பதில் மன்றம் மகிழ்ச்சி அடைகிறது. சுகாதார அமைச்சின் செய்தி அறிக்கையை இங்கே காணலாம்.

21. தற்போதுள்ள மற்றும் கூடுதல் ஆதரவுத் திட்டங்களைக் கணக்கில் கொண்ட பிறகு, சிங்கப்பூர் குடிமக்கள் அனைவரது நிகர சந்தா உயர்வுகளும் முதல் ஆண்டில் சுமார் 10% வரை இருக்கும். சந்தாக்களை மெடிசேவ் பயன்படுத்தி தொடர்ந்து முழுமையாகச் செலுத்திட முடியும். நிகர உத்தேச சந்தாக்களைப் பின்னிணைப்பு C-ல் காணலாம்.

22. சிங்கப்பூரர்கள் பலர் தங்களைச் சார்ந்திருப்போரின் சந்தாக்களையும் செலுத்துவதால், பல்வேறு வருமான அளவுகளையும் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் கொண்ட பல்வேறு வகையான குடும்பங்கள்மீதான சந்தாவின் தாக்கத்தை மன்றம் ஆராய்ந்தது. பெரும்பாலான வழக்கமான குடும்பங்களின் மொத்த மெடிஷீல்டு லைஃப் சந்தாக்கள், நிதி உதவிக்குப் பிறகு, அந்தக் குடும்பங்களின் வருடாந்தர மெடிசேவ் சந்தாவுக்கும் உள்வரவுக்கும் உட்பட்டிருக்கும் என்பதை நாங்கள் கவனித்தோம். சில எடுத்துக்காட்டுகள் பின்னிணைப்பு D-ல் காட்டப்பட்டுள்ளன. நிதி உதவிகள், மெடிசேவ், குடும்ப ஆதரவு ஆகியவற்றுக்குப் பிறகும் சந்தாக்களைச் செலுத்த இயலாத வசதி குறைவானோருக்குக் கூடுதல் சந்தா ஆதரவு தொடர்ந்து கிடைக்கும். பணச் சிரமத்தின் காரணமாக ஒருவரும் மெடிஷீல்டு லைஃப் காப்பீட்டை இழந்துவிடமாட்டார்கள்.

## பொதுமக்களின் கருத்துகள்

23. மெடிஷீல்டு லைஃப் மன்றம் தனது முன்னோட்டப் பரிந்துரைகள் பற்றி, 29 செப்டம்பர் 2020 மாலை 6 மணியிலிருந்து 20 அக்டோபர் 2020 மாலை 6 மணி வரை பொதுமக்களிடமிருந்து கருத்துகளைப் பெற விரும்புகிறது. அனைத்து கருத்துகளையும் இணையம்வழியான கருத்துரைப்புப் படிவத்தைப் பயன்படுத்தி சமர்ப்பிக்கலாம், அல்லது பின்வரும் முகவரிக்குத் தபாலில் அனுப்பி வைக்கலாம்: Quality Service, Ministry of Health, 16 College Road, College of Medicine Building, Singapore 169854.

24. மெடிஷீல்டு லைஃப் பற்றி மேல்விவரம் அறிய, தகவல் கையேட்டை இங்கே பார்க்கலாம், அல்லது சுகாதார அமைச்சின் இணையத்தளத்திற்கு இங்கே வருகையளிக்கலாம்.

மெடிஷீல்டு லைஃப் திட்டத்தின் கொள்கை மற்றும் திட்ட வரையறைகள் குறித்து பரிந்துரைகள் செய்வதற்கும், மெடிஷீல்டு லைஃப் திட்ட நிர்வாகத்தை மறுஆய்வு செய்வதற்கும் மெடிஷீல்டு லைஃப் மன்றத்தை சுகாதார அமைச்சர் நியமித்தார். இந்த மன்றத்தில் தற்போது 11 உறுப்பினர்கள் உள்ளனர். மாறுபட்ட பின்னணிகளைக் கொண்ட அவர்கள், காப்புறுதி, முதலீடு, மருத்துவம் போன்ற துறைகளில் நிபுணத்துவத் திறன் பெற்றவர்கள். மெடிஷீல்டு லைஃப் மன்றத்தையும் அதன் தற்போதைய உறுப்பினர்களையும் பற்றி இங்கே மேல்விவரம் அறியலாம்.

பின்னிணைப்பு A

2015 முதல் மெடிஷீல்டு லைஃப் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள மேம்பாடுகளின் பட்டியல்

**2018**

1. பொது மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகளிலிருந்து சமூக மருத்துவமனைகளில் நேரடியாகச் சேர்க்கப்படுவோருக்குக் காப்பீடு நீட்டிக்கப்பட்டது. நோயைத் தெளிவாகக் கண்டறிந்த பிறகு, உடல்நிலை சீராக இருப்பதாக மதிப்பிடப்படும் நோயாளிகளுக்கு, சமூக மருத்துவமனையில் மருத்துவ, தாதிமை மற்றும்/அல்லது மறுவாழ்வு பராமரிப்பு தேவைப்படும் நிலையில், ஆகப் பொருத்தமான சூழலில் பராமரிப்பு அளிப்பதற்கு இது துணை புரிந்தது.

2. நாட்பட்ட குடல் செயலிழப்பின் காரணமாக நீண்டகாலத்திற்குச் சிரைவழி ஊட்டமளிப்பு பெறும் நோயாளிகளுக்கு மாதத்திற்கு $1,700 புதிய கோரிக்கை வரம்பு. இதுபோன்ற அதிக விலையான சிகிச்சைகள் தேவைப்படும் நோயாளிகளுக்கு இது அதிக மனநிம்மதி அளித்தது.

3. இரண்டு அரிய பிறவிக் குறைபாடுகளான ட்ரைசொமி 18, அலொபர் ஹோலோப்ரோசென்செஃபலி ஆகியவற்றுக்கான அறுவை சிகிச்சைகளுக்குக் காப்பீடு நீட்டிக்கப்பட்டது. இவ்விரு குறைபாடுகளுக்கும் சிகிச்சை அவ்வளவாகப் பலனளிக்காததால், மெடிஷீல்டு லைஃப் காப்பீட்டிலிருந்து இவை முன்னதாக விலக்கப்பட்டிருந்தன. ஆனால், அறுவை சிகிச்சை மூலம் நோயாளிகளின் வாழ்க்கைத் தரத்தையும் உயிர்பிழைப்பையும் இப்போது மேம்படுத்த முடியும் என அண்மை அனைத்துலக ஆய்வுகள் காட்டுவதால், மெடிஷீல்டு லைஃப் காப்பீடு நீட்டிக்கப்பட்டது.

**2019**

4. ஆபத்தான கர்ப்பகாலத்திற்கும் பிரசவம் தொடர்பான சிக்கல்களுக்கும் தேவைப்படும் உள்நோயாளி சிகிச்சைக்குக் காப்பீடு நீட்டிக்கப்பட்டது. இந்தச் சிக்கல்களால் பெருமளவிலான மருத்துவமனை கட்டணங்களை எதிர்நோக்கக்கூடிய பெற்றோர்களுக்கு இது அதிக மன நிம்மதி அளித்தது.

5. பல்கூட்டு எலும்புமஜ்ஜை புற்றுநோய்க்காக உள்நோயாளியாகத் தங்கிய பிறகு வெளிநோயாளியாகத் தொடர்ந்து பெறும் தன்னியலான எலும்புமஜ்ஜை மாற்று சிகிச்சை ஒவ்வொன்றுக்கும் $6.000 புதிய கோரிக்கை வரம்பு. நோயாளிகள் மருத்துவமனையில் தங்கியிருக்கும் காலகட்டத்தை 3 வாரங்கள் வரை குறைப்பதற்கு இது உதவும்.

**2020**

6. அதிக விலையாக இருக்கக்கூடிய அதிக சிக்கலான அறுவை சிகிச்சைகளுக்கு மேம்பட்ட காப்பீடு வழங்க, அறுவை சிகிச்சைகளுக்கான கோரிக்கை வரம்புகள் உயர்த்தப்பட்டு, அதிக நுணுக்கமான கோரிக்கை வரம்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

7. சமூக மருத்துவமனைகளிலும் உள்நோயாளி அந்திமக்கால இல்லங்களிலும் புதிய உள்நோயாளி அந்திமக்கால நோய்த்தணிவு பராமரிப்புச் சேவைக்குக் காப்பீடு நீட்டிக்கப்பட்டது. நோய்த்தணிவு பராமரிப்பு தேவைப்படும் நோயாளிகளுக்கான ஆதரவை மேம்படுத்தவும், நோயாளிகள் சரியான இடத்தில் இருக்கவும் இது துணை புரிகிறது.

**பின்னிணைப்பு B**

**அட்டவணை B1: கோரிக்கை வரம்புகளில் பரிந்துரைக்கப்படும் மாற்றங்கள்**

| | தற்போது | பரிந்துரைக்கப்படுவது |
|---|---|---|
| **உள்நோயாளி சிகிச்சைகள்** | | |
| படுக்கைப்பிரிவு, சிகிச்சைக்கான அன்றாடக் கட்டணங்கள் | | |
| - வழக்கமான படுக்கைப்பிரிவு<br>- தீவிர சிகிச்சைப் பிரிவு | ஒரு நாளுக்கு $700<br>ஒரு நாளுக்கு $1,200 | ஒரு நாளுக்கு $800*<br>ஒரு நாளுக்கு $2,200* |
| * *முதல் இரண்டு நாட்களுக்கு ஒவ்வொரு நாளுக்கும் கூடுதலாக $200 கோரிக்கை வரம்பு உண்டு* | | |
| - உளநோய் சிகிச்சை | ஒரு நாளுக்கு $100, ஒரு கொள்கை ஆண்டில் அதிகபட்சம் 35 நாட்கள் | ஒரு நாளுக்கு $160, ஒரு கொள்கை ஆண்டில் அதிகபட்சம் 60 நாட்கள் |
| ஸ்டீரியோடாக்டிக் கதிரியக்க அறுவை சிகிச்சை | ஒவ்வொரு சிகிச்சைக்கும் $4,800 | ஒவ்வொரு சிகிச்சைக்கும் $10,000 |
| சமூக மருத்துவமனை | | |
| - மறுவாழ்வு பராமரிப்பு ^<br>- துணை தீவிரப் பராமரிப்பு ^ | ஒரு நாளுக்கு $350 | ஒரு நாளுக்கு $350<br>ஒரு நாளுக்கு $430 |
| **வெளிநோயாளி சிகிச்சைகள்** | | |
| சிறுநீரக இரத்தச் சுத்திகரிப்பு | ஒரு மாதத்திற்கு $1,000 | ஒரு மாதத்திற்கு $1,100 |
| மனித உறுப்பு மாற்றுக்கான தடுப்பாற்றல் குறைப்பு சிகிச்சை | ஒரு மாதத்திற்கு $200 | ஒரு மாதத்திற்கு $550 |
| **புற்றுநோய்க்கான கதிரியக்க சிகிச்சை** | | |
| வெளிப்புற கதிரியக்க சிகிச்சை (உடலின் ஒருபகுதிக்கானது தவிர்த்து) | ஒரு சிகிச்சைக்கு $140 | ஒரு சிகிச்சைக்கு $300 |
| உடலின் ஒருபகுதிக்கான கதிரியக்க சிகிச்சை | | ஒரு சிகிச்சைக்கு $900 |
| **அதிகபட்ச கோரிக்கை வரம்புகள்** | | |
| கொள்கை ஆண்டின் கோரிக்கை வரம்பு | $100,000 | $150,000 |

^ *மறுவாழ்வு பராமரிப்பு என்பது ஒருவரின் நோய்க்குப் பிறகு நேரும் இயலாமை மற்றும் இயக்காற்றல் குறைபாட்டை சீர்ப்படுத்தும் பயிற்சி சிகிச்சையைக் குறிக்கிறது. துணை தீவிரப் பராமரிப்பு என்பது தீவிர கவனிப்பளிக்கும் மருத்துவமனைகளில் வழங்கப்படுவதைவிடக் குறைவான தீவிரம் கொண்ட மருத்துவ, தாதிமை பராமரிப்பு கூடுதலாகத் தேவைப்படும் சிக்கலான மருத்துவப் பிரச்சனைகளுக்கானது.*

அட்டவணை B2: கழிப்புத்தொகைகளில் பரிந்துரைக்கப்படும் மாற்றங்கள்

| படுக்கைப்பிரிவு / சிகிச்சை | தற்போது | பரிந்துரைக்கப்படுவது |
|---|---|---|
| பகல்நேர அறுவை சிகிச்சை<br>- 80 வயதுக்கு மேல் | $3,000 | $2,000 |

அட்டவணை B3: விகிதப்படியான காரணிகளில் பரிந்துரைக்கப்படும் மாற்றங்கள்

| படுக்கைப்பிரிவு / சிகிச்சை | தற்போது | பரிந்துரைக்கப்படுவது |
|---|---|---|
| தனியார் மருத்துவமனை (பகல்நேர அறுவை சிகிச்சை உட்பட) | 35% | 25% |

<u>பின்னிணைப்பு C</u>

**<u>அட்டவணை C1</u>: 2021-ல் திருத்தப்பட்ட மெடிஷீல்டு லைஃப் சந்தாவின் உத்தேச அட்டவணை (சிங்கப்பூர் குடிமக்கள்)**

| அடுத்த பிறந்தநாளில் வயது | நிதி உதவிக்குமுன் தற்போதைய சந்தாக்கள் ($) | நிதி உதவிக்குமுன் திருத்தப்பட்ட சந்தாக்கள் ($) | குறைந்த முதல் நடுத்தர வருமானம் ஈட்டுவோருக்கான சந்தா நிதி உதவிக்குப் பிறகு மெடிஷீல்டு லைஃப் சந்தாக்கள் ($) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குறைந்த வருமானம் | | குறைந்த முதல் நடுத்தர வருமானம் | | நடுத்தர உயர் வருமானம் | |
| | | | தற்போது | திருத்தப்பட்டது | தற்போது | திருத்தப்பட்டது | தற்போது | திருத்தப்பட்டது |
| 1 – 20 | 130 | 145 | 98 | 109 | 104 | 116 | 111 | 124 |
| 21 – 30 | 195 | 250 | 147 | 188 | 156 | 200 | 166 | 213 |
| 31 – 40 | 310 | 390 | 233 | 293 | 248 | 312 | 264 | 332 |
| 41 – 50 | 435 | 520 | 305 | 364 | 327 | 390 | 348 | 416 |
| 51 – 60 | 630 | 795 | 441 | 557 | 473 | 597 | 504 | 636 |
| 61 – 65 | 755 | 990 | 491 | 644 | 529 | 693 | 567 | 743 |
| 66 – 70 | 815 | 1120 | 530 | 728 | 571 | 784 | 612 | 840 |
| 71 – 73 | 885 | 1245 | 576 | 810 | 620 | 872 | 664 | 934 |
| 74 – 75 | 975 | 1345 | 634 | 875 | 683 | 942 | 732 | 1009 |
| 76 – 78 | 1130 | 1525 | 678 | 915 | 735 | 992 | 791 | 1068 |
| 79 – 80 | 1175 | 1660 | 705 | 996 | 764 | 1079 | 823 | 1162 |
| 81 – 83 | 1250 | 1680 | 750 | 1008 | 813 | 1092 | 875 | 1176 |
| 84 – 85 | 1430 | 1885 | 858 | 1131 | 930 | 1226 | 1001 | 1320 |
| 86 – 90 | 1500 | 2015 | 825 | 1109 | 900 | 1209 | 975 | 1310 |
| > 90 | 1530 | 2030 | 765 | 1015 | 842 | 1117 | 918 | 1218 |

<u>குறிப்புகள்:</u>

1. குறைந்த முதல் நடுத்தர வருமானத்திற்கான சந்தா நிதி உதவிகளும் ஒருமுறை மட்டும் வழங்கப்படும் கொவிட் நிதி உதவியும் (முதல் ஆண்டு) இந்த அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கூடுதலான மெர்டேக்கா தலைமுறை நிதி உதவிகளும் முன்னோடித் தலைமுறை நிதி உதவிகளும் உள்ளடக்கப்படவில்லை.

2. உள்ளடக்கப்பட்டுள்ள சந்தா நிதி உதவிகள், $13,000 அல்லது அதைவிடக் குறைவான ஆண்டு மதிப்புள்ள சொத்துகளில் வசிக்கும் சிங்கப்பூர் குடிமக்களுக்கானது. ஆண்டு மதிப்பு $13,001 முதல் $21,000 வரையில் இருந்தால் 10 விழுக்காடு குறைவான நிதி உதவி கிடைக்கும். ஆண்டு மதிப்பு $21,000-க்கு மேலாக இருந்தால் சந்தா நிதி உதவிகள் கிடைக்காது. ஒன்றுக்கு மேலான சொத்துகளின் உரிமையாளர்கள் சந்தா நிதி உதவிகளுக்குத் தகுதி பெறமாட்டார்கள். நிரந்தரவாசிகள், சிங்கப்பூர் குடிமக்களுக்கான சந்தா நிதி உதவிகளில் பாதியைப் பெறுவார்கள்.

3. குறைந்த வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $1,200 அல்லது அதைவிடக் குறைவாக உள்ளவர்களைக் குறிக்கிறது. குறைந்த முதல் நடுத்தர வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $1,201 முதல் $2,000 வரை உள்ளவர்களைக் குறிக்கிறது. நடுத்தர உயர் வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $2,001 முதல் $2,800 வரை உள்ளவர்களைக் குறிக்கிறது.

4. திருத்தப்பட்ட சந்தாக்கள் உத்தேச அனுகூல அட்டவணையின் அடிப்படையிலானவை, மேற்கொண்டு திருத்தப்படக்கூடியவை.

## அட்டவணை C2: 2023-ல் திருத்தப்பட்ட மெடிஷீல்டு லைஃப் சந்தாவின் உத்தேச அட்டவணை (சிங்கப்பூர் குடிமக்கள்)

| அடுத்த பிறந்தநாளில் வயது | நிதி உதவிக்குமுன் தற்போதைய சந்தாக்கள் ($) | நிதி உதவிக்குமுன் திருத்தப்பட்ட சந்தாக்கள் ($) | குறைந்த முதல் நடுத்தர வருமானம் ஈட்டுவோருக்கான சந்தா நிதி உதவிக்குமுன் மெடிஷீல்டு லைஃப் சந்தாக்கள் ($) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குறைந்த வருமானம் | | குறைந்த முதல் நடுத்தர வருமானம் | | நடுத்தர உயர் வருமானம் | | உயர் வருமானம் | |
| | | | தற்போது | திருத்தப்பட்டது | தற்போது | திருத்தப்பட்டது | தற்போது | திருத்தப்பட்டது | தற்போது | திருத்தப்பட்டது |
| 1 – 20 | 130 | 145 | 98 | 109 | 104 | 116 | 111 | 124 | 130 | 145 |
| 21 – 30 | 195 | 250 | 147 | 188 | 156 | 200 | 166 | 213 | 195 | 250 |
| 31 – 40 | 310 | 390 | 233 | 293 | 248 | 312 | 264 | 332 | 310 | 390 |
| 41 – 50 | 435 | 525 | 305 | 368 | 327 | 394 | 348 | 420 | 435 | 525 |
| 51 – 60 | 630 | 800 | 441 | 560 | 473 | 600 | 504 | 640 | 630 | 800 |
| 61 – 65 | 755 | 1020 | 491 | 663 | 529 | 714 | 567 | 765 | 755 | 1020 |
| 66 – 70 | 815 | 1100 | 530 | 715 | 571 | 770 | 612 | 825 | 815 | 1100 |
| 71 – 73 | 885 | 1195 | 576 | 777 | 620 | 837 | 664 | 897 | 885 | 1195 |
| 74 – 75 | 975 | 1320 | 634 | 858 | 683 | 924 | 732 | 990 | 975 | 1320 |
| 76 – 78 | 1130 | 1530 | 678 | 918 | 735 | 995 | 791 | 1071 | 1130 | 1530 |
| 79 – 80 | 1175 | 1590 | 705 | 954 | 764 | 1034 | 823 | 1113 | 1175 | 1590 |
| 81 – 83 | 1250 | 1675 | 750 | 1005 | 813 | 1089 | 875 | 1173 | 1250 | 1675 |
| 84 – 85 | 1430 | 1935 | 858 | 1161 | 930 | 1258 | 1001 | 1355 | 1430 | 1935 |
| 86 – 90 | 1500 | 2025 | 825 | 1114 | 900 | 1215 | 975 | 1317 | 1500 | 2025 |
| > 90 | 1530 | 2055 | 765 | 1028 | 842 | 1131 | 918 | 1233 | 1530 | 2055 |

குறிப்புகள்:

1. குறைந்த முதல் நடுத்தர வருமானத்திற்கான சந்தா நிதி உதவிகள் இந்த அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கூடுதலான மெர்டேக்கா தலைமுறை நிதி உதவிகளும் முன்னோடித் தலைமுறை நிதி உதவிகளும் உள்ளடக்கப்படவில்லை.

2. உள்ளடக்கப்பட்டுள்ள சந்தா நிதி உதவிகள், $13,000 அல்லது அதைவிடக் குறைவான ஆண்டு மதிப்புள்ள சொத்துகளில் வசிக்கும் சிங்கப்பூர் குடிமக்களுக்கானது. ஆண்டு மதிப்பு $13,001 முதல் $21,000 வரையில் இருந்தால் 10 விழுக்காடு குறைவான நிதி உதவி கிடைக்கும். ஆண்டு மதிப்பு $21,000-க்கு மேலாக இருந்தால் சந்தா நிதி உதவிகள் கிடைக்காது. ஒன்றுக்கு மேலான சொத்துகளின் உரிமையாளர்கள் சந்தா நிதி உதவிகளுக்குத் தகுதி பெறமாட்டார்கள். நிரந்தரவாசிகள், சிங்கப்பூர் குடிமக்களுக்கான சந்தா நிதி உதவிகளில் பாதியைப் பெறுவார்கள்.

3. குறைந்த வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $1,200 அல்லது அதைவிடக் குறைவாக உள்ளவர்களைக் குறிக்கிறது. குறைந்த முதல் நடுத்தர வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $1,201 முதல் $2,000 வரை உள்ளவர்களைக் குறிக்கிறது. நடுத்தர உயர் வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $2,001 முதல் $2,800 வரை உள்ளவர்களைக் குறிக்கிறது.

4. திருத்தப்பட்ட சந்தாக்கள் உத்தேச அனுகூல அட்டவணையின் அடிப்படையிலானவை, மேற்கொண்டு திருத்தப்படக்கூடியவை.

**அட்டவணை C3**: 2021-ல் **திருத்தப்பட்ட மெடிஷீல்டு லை∴ப் சந்தாவின் உத்தேச அட்டவணை (மெர்டேக்கா தலைமுறையினர்)**

| அடுத்த பிறந்தநாளில் வயது | சந்தா நிதி உதவி, மெர்டேக்கா தலைமுறை நிதி உதவிகள், ஒருமுறை வழங்கப்படும் கொவிட்-19 நிதி உதவி ஆகியவற்றுக்குப் பிறகு மெடிஷீல்டு லை∴ப் சந்தாக்கள் ($) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குறைந்த வருமானம் | | குறைந்த முதல் நடுத்தர வருமானம் | | நடுத்தர உயர் வருமானம் | | உயர் வருமானம் | |
| | தற்போது | திருத்தப்பட்டது | தற்போது | திருத்தப்பட்டது | தற்போது | திருத்தப்பட்டது | தற்போது | திருத்தப்பட்டது |
| 61 – 65 | 453 | 501 | 491 | 543 | 529 | 585 | 718 | 793 |
| 66 – 70 | 489 | 541 | 530 | 586 | 571 | 631 | 775 | 856 |
| 71 – 73 | 531 | 587 | 576 | 636 | 620 | 685 | 841 | 930 |
| 74 – 75 | 585 | 648 | 634 | 702 | 683 | 755 | 927 | 1025 |
| 76 – 78 | 565 | 625 | 622 | 688 | 678 | 750 | 1017 | 1125 |
| 79 – 80 | 588 | 650 | 647 | 715 | 705 | 780 | 1058 | 1170 |
| 81 – 83 | 625 | 689 | 688 | 758 | 750 | 827 | 1125 | 1240 |
| 84 – 85 | 715 | 791 | 787 | 870 | 858 | 949 | 1287 | 1424 |
| 86 – 90 | 675 | 746 | 750 | 829 | 825 | 912 | 1350 | 1492 |
| > 90 | 612 | 675 | 689 | 760 | 765 | 844 | 1377 | 1519 |

குறிப்புகள்:

1. குறைந்த முதல் நடுத்தர வருமானத்திற்கான சந்தா நிதி உதவிகளும், கூடுதலான மெர்டேக்கா தலைமுறை நிதி உதவிகளும், ஒருமுறை வழங்கப்படும் கொவிட் நிதி உதவியும் (முதல் ஆண்டு) இந்த அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. உள்ளடக்கப்பட்டுள்ள சந்தா நிதி உதவிகள், $13,000 அல்லது அதைவிடக் குறைவான ஆண்டு மதிப்புள்ள சொத்துகளில் வசிக்கும் சிங்கப்பூர் குடிமக்களுக்கானது. ஆண்டு மதிப்பு $13,001 முதல் $21,000 வரையில் இருந்தால் 10 விழுக்காடு குறைவான நிதி உதவி கிடைக்கும். ஆண்டு மதிப்பு $21,000-க்கு மேலாக இருந்தால் சந்தா நிதி உதவிகள் கிடைக்காது. ஒன்றுக்கு மேலான சொத்துகளின் உரிமையாளர்கள் சந்தா நிதி உதவிகளுக்குத் தகுதி பெறமாட்டார்கள்.

3. குறைந்த வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $1,200 அல்லது அதைவிடக் குறைவாக உள்ளவர்களைக் குறிக்கிறது. குறைந்த முதல் நடுத்தர வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $1,201 முதல் $2,000 வரை உள்ளவர்களைக் குறிக்கிறது. நடுத்தர உயர் வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $2,001 முதல் $2,800 வரை உள்ளவர்களைக் குறிக்கிறது. உயர் வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $2,800 மேலாக உள்ளவர்களைக் குறிக்கிறது.

4. காட்டப்பட்டுள்ள புள்ளிவிவரங்களில் 2019 முதல் 2023 வரை மெர்டேக்கா தலைமுறையினருக்கு வழங்கப்படும் வருடாந்தர மெடிசேவ் நிரப்புத்தொகை உள்ளடக்கப்படவில்லை.

5. திருத்தப்பட்ட சந்தாக்கள் உத்தேச அனுகூல அட்டவணையின் அடிப்படையிலானவை, மேற்கொண்டு திருத்தப்படக்கூடியவை.

## அட்டவணை C4: 2023-ல் திருத்தப்பட்ட மெடிஷீல்டு லைஃப் சந்தாவின் உத்தேச அட்டவணை (மெர்டேக்கா தலைமுறையினர்)

| அடுத்த பிறந்தநாளில் வயது | சந்தா நிதி உதவிக்கும் மெர்டேக்கா தலைமுறை நிதி உதவிகளுக்கும் பிறகு மெடிஷீல்டு லைஃப் சந்தாக்கள் ($) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குறைந்த வருமானம் | | குறைந்த முதல் நடுத்தர வருமானம் | | நடுத்தர உயர் வருமானம் | | உயர் வருமானம் | |
| | தற்போது | திருத்தப்பட்டது | தற்போது | திருத்தப்பட்டது | தற்போது | திருத்தப்பட்டது | தற்போது | திருத்தப்பட்டது |
| 61 – 65 | 453 | 612 | 491 | 663 | 529 | 714 | 718 | 969 |
| 66 – 70 | 489 | 660 | 530 | 715 | 571 | 770 | 775 | 1045 |
| 71 – 73 | 531 | 717 | 576 | 777 | 620 | 837 | 841 | 1136 |
| 74 – 75 | 585 | 792 | 634 | 858 | 683 | 924 | 927 | 1254 |
| 76 – 78 | 565 | 765 | 622 | 842 | 678 | 918 | 1017 | 1377 |
| 79 – 80 | 588 | 795 | 647 | 875 | 705 | 954 | 1058 | 1431 |
| 81 – 83 | 625 | 838 | 688 | 922 | 750 | 1005 | 1125 | 1508 |
| 84 – 85 | 715 | 968 | 787 | 1065 | 858 | 1161 | 1287 | 1742 |
| 86 – 90 | 675 | 912 | 750 | 1013 | 825 | 1114 | 1350 | 1823 |
| > 90 | 612 | 822 | 689 | 925 | 765 | 1028 | 1377 | 1850 |

குறிப்புகள்:

1. குறைந்த முதல் நடுத்தர வருமானத்திற்கான சந்தா நிதி உதவிகளும் கூடுதலான மெர்டேக்கா தலைமுறை நிதி உதவிகளும் இந்த அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. உள்ளடக்கப்பட்டுள்ள சந்தா நிதி உதவிகள், $13,000 அல்லது அதைவிடக் குறைவான ஆண்டு மதிப்புள்ள சொத்துகளில் வசிக்கும் சிங்கப்பூர் குடிமக்களுக்கானது. ஆண்டு மதிப்பு $13,001 முதல் $21,000 வரையில் இருந்தால் 10 விழுக்காடு குறைவான நிதி உதவி கிடைக்கும். ஆண்டு மதிப்பு $21,000-க்கு மேலாக இருந்தால் சந்தா நிதி உதவிகள் கிடைக்காது. ஒன்றுக்கு மேலான சொத்துகளின் உரிமையாளர்கள் சந்தா நிதி உதவிகளுக்குத் தகுதி பெறமாட்டார்கள்.

3. குறைந்த வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $1,200 அல்லது அதைவிடக் குறைவாக உள்ளவர்களைக் குறிக்கிறது. குறைந்த முதல் நடுத்தர வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $1,201 முதல் $2,000 வரை உள்ளவர்களைக் குறிக்கிறது. நடுத்தர உயர் வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $2,001 முதல் $2,800 வரை உள்ளவர்களைக் குறிக்கிறது. உயர் வருமானம் என்பது குடும்பத்தின் மாதாந்தர தனிநபர் சராசரி வருமானம் $2,800 மேலாக உள்ளவர்களைக் குறிக்கிறது.

4. காட்டப்பட்டுள்ள புள்ளிவிவரங்களில் 2019 முதல் 2023 வரை மெர்டேக்கா தலைமுறையினருக்கு வழங்கப்படும் வருடாந்தர மெடிசேவ் நிரப்புத்தொகை உள்ளடக்கப்படவில்லை.

5. திருத்தப்பட்ட சந்தாக்கள் உத்தேச அனுகூல அட்டவணையின் அடிப்படையிலானவை, மேற்கொண்டு திருத்தப்படக்கூடியவை.

**அட்டவணை C5: 2021-ல் திருத்தப்பட்ட மெடிஷீல்டு லைஃப் சந்தாவின் உத்தேச அட்டவணை (முன்னோடித் தலைமுறையினர்)**

| அடுத்த பிறந்தநாளில் வயது | நிதி உதவிக்குப் பிறகு தற்போதைய மெடிஷீல்டு லைஃப் சந்தாக்கள் ($) | முன்னோடித் தலைமுறை, ஒருமுறை வழங்கப்படும் கொவிட்-19 நிதி உதவிகளுக்குப் பிறகு திருத்தப்பட்ட மெடிஷீல்டு லைஃப் சந்தாக்கள் ($) |
|---|---|---|
| 71 – 73 | 491 | 543 |
| 74 – 75 | 498 | 551 |
| 76 – 78 | 518 | 573 |
| 79 – 80 | 537 | 594 |
| 81 – 83 | 566 | 624 |
| 84 – 85 | 616 | 681 |
| 86 – 90 | 615 | 680 |
| > 90 | 612 | 675 |

குறிப்புகள்:

1. முன்னோடித் தலைமுறை நிதி உதவிகளும் ஒருமுறை வழங்கப்படும் கொவிட் நிதி உதவியும் (முதல் ஆண்டு) இந்த அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
2. காட்டப்பட்டுள்ள புள்ளிவிவரங்களில் முன்னோடித் தலைமுறையினருக்கான வருடாந்தர மெடிசேவ் நிரப்புத்தொகை உள்ளடக்கப்படவில்லை
3. திருத்தப்பட்ட சந்தாக்கள் உத்தேச அனுகூல அட்டவணையின் அடிப்படையிலானவை, மேற்கொண்டு திருத்தப்படக்கூடியவை.

**<u>அட்டவணை C6</u>: 2023-ல் திருத்தப்பட்ட மெடிஷீல்டு லைஃப் சந்தாவின் உத்தேச அட்டவணை (முன்னோடித் தலைமுறையினர்)**

| அடுத்த பிறந்தநாளில் வயது | நிதி உதவிக்குப் பிறகு தற்போதைய மெடிஷீல்டு லைஃப் சந்தாக்கள் ($) | முன்னோடித் தலைமுறை நிதி உதவிக்குப் பிறகு திருத்தப்பட்ட மெடிஷீல்டு லைஃப் சந்தாக்கள் ($) |
|---|---|---|
| 71 – 73 | 491 | 663 |
| 74 – 75 | 498 | 674 |
| 76 – 78 | 518 | 701 |
| 79 – 80 | 537 | 727 |
| 81 – 83 | 566 | 759 |
| 84 – 85 | 616 | 833 |
| 86 – 90 | 615 | 831 |
| > 90 | 612 | 822 |

குறிப்புகள்:

1. முன்னோடித் தலைமுறை நிதி உதவிகள் மட்டுமே இந்த அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
2. காட்டப்பட்டுள்ள புள்ளிவிவரங்களில் முன்னோடித் தலைமுறையினருக்கான வருடாந்தர மெடிசேவ் நிரப்புத்தொகை உள்ளடக்கப்படவில்லை.
3. திருத்தப்பட்ட சந்தாக்கள் உத்தேச அனுகூல அட்டவணையின் அடிப்படையிலானவை, மேற்கொண்டு திருத்தப்படக்கூடியவை.

## சிலவகை குடும்பங்கள்மீது திருத்தப்பட்ட மெடிஷீல்டு லை∴ப் சந்தாவின் உத்தேசத் தாக்கம்[6]

### குறைந்த வருமானம் ஈட்டும் தனிக் குடும்பம் - கோ குடும்பம்

திரு கோவுக்குத் திருமணமாகி இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவருக்கும் அவரது மனைவிக்கும் சுமார் 35 வயதிருக்கும். குடும்பத்தில் அவர் மட்டும்தான் வேலைக்குச் சென்று மாதத்திற்கு $2,000 சம்பாதிக்கிறார். அவர் ஓர் ஆண்டில் தனது மத்திய சேம நிதி மெடிசேவ் கணக்கில் சுமார் $2,340 செலுத்துகிறார்.

| வருடாந்தர மெடிசேவ் சந்தாக்கள் ^ | நிதி உதவிக்குப் பிறகு மெடிஷீல்டு லை∴ப் சந்தாக்கள் | நிதி உதவிக்குப் பிறகு கேர்ஷீல்டு லை∴ப் சந்தாக்கள் * | மெடிஷீல்டு லை∴ப், கேர்ஷீல்டு லை∴ப் சந்தாக்களைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மெடிசேவ் சந்தாவின் விழுக்காடு |
|---|---|---|---|
| $2,340 | $803 | $268 | 46% |

^ ஆண்டு வருமானத்தில் ஒரு மாத போனஸ் இருக்கும் என்ற ஊகத்தின் அடிப்படையில்
* கேர்ஷீல்டு லை∴ப் சந்தாக்கள் திரு கோவுக்கும் அவரது மனைவிக்கும் மட்டுமே பொருந்தும்

### நடுத்தர வருமானம் ஈட்டும் தனிக் குடும்பம் - முத்து குடும்பம்

திரு முத்துவுக்குத் திருமணமாகி இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவருக்கும் அவரது மனைவிக்கும் சுமார் 35 வயதிருக்கும். குடும்பத்தில் அவர் மட்டும்தான் வேலைக்குச் சென்று மாதத்திற்கு $6,000 சம்பாதிக்கிறார். அவர் ஓர் ஆண்டில் தனது மத்திய சேம நிதி மெடிசேவ் கணக்கில் சுமார் $7,020 செலுத்துகிறார்.

| வருடாந்தர மெடிசேவ் சந்தாக்கள் ^ | நிதி உதவிக்குப் பிறகு மெடிஷீல்டு லை∴ப் சந்தாக்கள் | நிதி உதவிக்குப் பிறகு கேர்ஷீல்டு லை∴ப் சந்தாக்கள் * | மெடிஷீல்டு லை∴ப், கேர்ஷீல்டு லை∴ப் சந்தாக்களைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மெடிசேவ் சந்தாவின் விழுக்காடு |
|---|---|---|---|
| $7,020 | $856 | $296 | 16% |

^ ஆண்டு வருமானத்தில் ஒரு மாத போனஸ் இருக்கும் என்ற ஊகத்தின் அடிப்படையில்
* கேர்ஷீல்டு லை∴ப் சந்தாக்கள் திரு முத்துவுக்கும் அவரது மனைவிக்கும் மட்டுமே பொருந்தும்

[6] இந்தப் பகுப்பாய்வில் தற்போதுள்ள சந்தா நிதி உதவிகள், மெர்டேக்கா/முன்னோடித் தலைமுறை நிதி உதவிகள், மெர்டேக்கா/முன்னோடித் தலைமுறை மெடிசேவ் நிரப்புத்தொகைகள் ஆகியன கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன, ஆனால் முதுமைக்காலச் சந்தாத் தள்ளுபடிகளும் ஒருமுறை வழங்கப்படும் கொவிட்-19 நிதி உதவியும் கணக்கில் கொள்ளப்படவில்லை. பொருந்தத்தக்க இடங்களில், அவை சந்தாவை மேற்கொண்டு ஈடுசெய்யும்.

**நடுத்தர வருமானம் ஈட்டும் பெரிய குடும்பம் - ஸாஹிர் குடும்பம்**

திரு ஸாஹிருக்குத் திருமணமாகி இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவருக்கும் அவரது மனைவிக்கும் சுமார் 45 வயதிருக்கும். இருவரும் மாதத்திற்குத் தலா $4,000 சம்பாதிக்கிறார்கள். அவர்கள் ஓர் ஆண்டில் தங்களது மத்திய சேம நிதி மெடிசேவ் கணக்கில் சுமார் $9,360 செலுத்துகிறார்கள். திரு ஸாஹிரின் சுமார் 75 வயது மதிக்கத்தக்க வயதான பெற்றோர்கள் இருவரையும் அவர்கள் ஆதரிக்கின்றனர். பெற்றோர்கள் அவர்களுடன் வாழ்கிறார்கள்.

முன்னோடித் தலைமுறையினருக்கு, அவர்கள் பிறந்த ஆண்டுப் பிரிவின் அடிப்படையில், ஆண்டுக்கு $200 முதல் $800 வரையிலான மெடிசேவ் நிரப்புத்தொகைகளும் கிடைக்கிறது. தங்களது மெடிஷீல்டு லைஃப் சந்தாக்களைச் செலுத்த இதனை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

| வருடாந்தர மெடிசேவ் சந்தாக்கள் ^ | முன்னோடித் தலைமுறைக்கான மெடிசேவ் நிரப்புத்தொகை | நிதி உதவிகளுக்குப் பிறகு மெடிஷீல்டு லைஃப் சந்தாக்கள் | நிதி உதவிகளுக்குப் பிறகு கேர்ஷீல்டு லைஃப் சந்தாக்கள் * | மெடிஷீல்டு லைஃப், கேர்ஷீல்டு லைஃப் சந்தாக்களைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மெடிசேவ் சந்தா மற்றும் நிரப்புத்தொகைகளின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| $9,360 | $400 | $2,366 | $523 | 30% |

^ ஆண்டு வருமானத்தில் ஒரு மாத போனஸ் இருக்கும் என்ற ஊகத்தின் அடிப்படையில்
* கேர்ஷீல்டு லைஃப் சந்தாக்கள் திரு ஸாகிருக்கும் அவரது மனைவிக்கும் மட்டுமே பொருந்தும்

**குறைந்த வருமானம் ஈட்டும் மெர்டேக்கா தலைமுறை குடும்பம் - லீ குடும்பம்**

மெர்டேக்கா தலைமுறையைச் சேர்ந்த லீ தம்பதியர் 60 முதல் 65 வயதுக்கு இடைப்பட்டவர்கள். குடும்பத்தில் திரு லீ மட்டும்தான் வேலைக்குச் சென்று மாதத்திற்கு $1.700 சம்பாதிக்கிறார். அவர் ஓர் ஆண்டில் தனது மத்திய சேம நிதி மெடிசேவ் கணக்கில் சுமார் $2,320 செலுத்துகிறார்.

மெர்டேக்கா தலைமுறையினருக்கு 2019 முதல் 2023 வரை ஆண்டுதோறும் $200 மெடிசேவ் நிரப்புத்தொகைகள் கிடைக்கும். தங்களது மெடிஷீல்டு லைஃப் சந்தாக்களைச் செலுத்த இதனை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

| வருடாந்தர மெடிசேவ் சந்தாக்கள் ^ | முன்னோடித் தலைமுறைக்கான மெடிசேவ் நிரப்புத்தொகை | நிதி உதவிகளுக்குப் பிறகு மெடிஷீல்டு லைஃப் சந்தாக்கள் | நிதி உதவிகளுக்குப் பிறகு கேர்ஷீல்டு லைஃப் சந்தாக்கள் | மெடிஷீல்டு லைஃப், கேர்ஷீல்டு லைஃப் சந்தாக்களைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மெடிசேவ் சந்தா மற்றும் நிரப்புத்தொகைகளின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| $2,320 | $400 | $1,224 | $204 | 52% |

^ ஆண்டு வருமானத்தில் ஒரு மாத போனஸ் இருக்கும் என்ற ஊகத்தின் அடிப்படையில்